**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 33/2021**
**நாள்.02.04.2026**
**வா.சா.2- மோகனவேல்**
**த/பெ - நல்லதம்பி**
**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

11. வா.சா.ஆ.6 ஆவணத்தில் சர்வே எண்.294 ல் 200 அடி நீளமும், 20 அடி அகலமும் கொண்ட பாதை செல்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மாமூல வழிநடை பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

12. கரவண்டராயர் சொத்தை பெரியசாமிபிள்ளை 1984 ல் கிரையம் பெறும்போது நான் உடனிருந்ததால் தாவா சொத்திற்கான மூல ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மூல ஆவணம் இருக்கும்போது ஏன் மூல ஆவணத்தை பார்க்கவில்லை என்றால் பத்திர அலுவலகத்தில் பத்திரம் எழுதப்போகும்போது அது சம்பந்தப்பட்டவர்கள் அசல் ஆவணத்தை பார்பபதால் உடனிருக்ககூடிய எங்களுக்கு அது கொடுக்கவில்லை என்பதால் மூல ஆவணத்தை நான் பார்க்கவில்லை

13. நடராஜன் சர்வே எண்.294 ல் வீடு கட்டியுள்ளார். நடராஜன் சர்வே எண்.294 ல் வடக்கில் கிழக்கு பார்த்து வீடு கட்டியுள்ளார். மேற்படி வீடு கட்டியது இன்றைய தேதியில் சுமார் 5,6 வருடங்களுக்கு முன்பு கட்டியதாகும்.

14. நடராஜன் மேற்படி வீடு கட்டுவதற்கு முன்பு அந்த இடம் காலியாக இருந்தது என்றால் சரிதான். காலியிடமாக இருக்கும்போது விவசாயம் செய்து வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், அதுபற்றி என்னிடம் கேட்கவில்லை என்பதால் நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை.

15. நடராஜன் வீட்டிற்கு அருகில் வேறு வீடுகள் இல்லை என்றால் மேற்கு பக்கத்தில் சர்வே எண்.293 ல் வீடு உள்ளது. அது முருகனுக்கு சொந்தமான வீடாகும். ஆனால் சர்வே எண் சரியாக தெரியவில்லை.

16. நடராஜன் சர்வே எண்.294 ல் வீடு கட்டுவதற்கு முன்பு வேறு இடத்தில் அவருக்கு ஓட்டு வீடு இருந்தது. அதன் சர்வே எண் தெரியாது.

17. நடராஜன் கட்டியுள்ள வீட்டிற்கு பின்புறமுள்ள சர்வே எண்.292, 293, 285/2 பி, 285/2 ஏ ஆகியவற்றில் நிறைய சொத்துக்கள் உள்ளன என்றால் அதுபற்றி

எனக்கு தெரியாது. சர்வே எண்.294 க்கு அருகில் உள்ள சொத்து ஏறக்குறைய 3 ஏக்கர் இருந்த விவரம் தெரியும்.

18. மேற்படி 3 ஏக்கர் சொத்து காணப்பாடி - வடமதுரை ரோட்டில் இருந்து உள்ளது என்றால் சரிதான். நடராஜன் கோவிந்தராஜிடமிருந்தோ அல்லது அவரது முன்பாத்தியஸ்தர்களிடமிருந்தோ கிரையம் பெறவில்லை என்றால் சரிதான்.

19. நடராஜன் அவருக்கு சொந்தமான பழைய வீட்டிற்கு தாவா பாதையை பயன்படுத்திவரவில்லை என்றால் சரியல்ல, அது தான் பாதை.

20. நடராஜன் தாவா சொத்தை 1991 ம் ஆண்டு கிரையம் பெறுவதற்கு முன்பு அவருக்கு சொந்தமான பழைய வீட்டிற்கு எந்த பாதை வழியாக சென்று வந்தார் என்றால் தாவா பாதை வழியாக தான் சென்று வந்தார்.

21. வாதி கிரையம் பெற்ற சொத்தில் கிழமேல் 20 அடி அகலம், 200 அடி நீளத்திலும் பாதை இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது மட்டும் தான் பாதை என்றாலும், பிராதில் குறிப்பிட்டுள்ளபடி தென்வடலாக 20 அடி அகலத்திலும், 200 அடி நீளத்திலும் பாதை இருப்பதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல.

22. வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு அருகில் எனக்கு எந்த சொத்தும் இல்லை. எனக்கு சர்வே எண்.292 ல் சொத்து உள்ளது.

23. நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**